**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC.149/2018
Sessions)

( Prosecution P.W.6
Deposition of witness for (Defence
(Court

| Name | ஜெயக்குமார் | -- | |
|---|---|---|---|
| Father's Name | கஸ்தூரி தேவன் | Calling | கொத்தனார் வேலை |
| Village | மதுரை | Religion | இந்து |
| Taluk | மதுரை | Age | 49 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 18th day of August 2025.

**முதல் விசாரணை**

நான் மதுரையில் குடியிருந்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. எனது மகன் பெயர் மாயாண்டி என்ற பிதுன் குமார். 07.06.2017 தேதியில் காலை 11.00 மணியளவில் நான் மதுரை மாவட்டம், பரவை கிராமத்தில் கொத்தனார் வேலை பார்த்துக்கொண்டிருந்தேன். அப்போது மம்சாபுரம் போலீசார் எனக்கு போன் மூலமாக எனது மகன் கிழே விழுந்துவிட்டதாகவும் உடனே காவல் நிலையத்திற்கு வருமாறும் கூறினார்கள். உடனே நானும் எனது மனைவியும் பேருந்தில் ஏறி திருவில்லிபுத்தூர் வந்துவிட்டோம். பின்னர் அங்கிருந்து மம்சாபுரம் காவல் நிலையம் சென்றோம். எனது மகனின் பிரேதம் திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் இருப்பதாக கூறவே நாங்கள் ஆட்டோவில் ஏறி திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனை சென்றோம். அங்கு சென்று எனது மகனின் பிரேதத்தை பார்த்தேன். நான் பார்த்தபோது எனது மகனுக்கு நெஞ்சில் பலத்த அடியும் வலது காலில் பலத்த காயம் பட்டும் இருந்தது. பின்னர் பிரேத பரிசோதனை முடிந்து முறைப்படி அடக்கம் செய்வதற்காக ஆம்புலன்ஸ் மூலமாக மதுரைக்கு கொண்டு சென்று அடக்கம் செய்துவிட்டோம். எனது மகனும் இன்னும் இருவரும் சேர்ந்து ஒரே இருசக்கர வாகனத்தில் செண்பகதோப்பிற்கு குளிக்க சென்றுவிட்டு திரும்பி வரும்போது டிராக்டர் மோதி இந்த விபத்து ஏற்பட்டதாக தெரிந்துக்கொண்டேன். இது தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

என் மகனுக்கு என்ன நடந்தது என்ற விபரம் போலீசார் சொல்லித்தான் தெரியும். அவன் கிழே விழுந்துவிட்டதாக சொல்லித்தான் போலீசார் என்னை அழைத்தார்கள். அவனது நண்பர் சுந்தர்ராஜ் மற்றும் ஒருவர் ஆகியோர் சென்றார்கள். என் மகனின் நண்பர்கள் நான் நேரில் பார்த்ததில்லை. அவர்கள் எந்த ஊரை சேர்ந்தவர்கள் என்றும் எனக்கு தெரியாது. செண்பகதோப்பு என்பது பாதுகாக்கப்பட்ட வனப்பகுதி என்பது எனக்கு தெரியாது. குறிப்பிட்ட நேரத்தில்தான் அங்கு குளிக்க அனுமதி உண்டு. செண்பகதோப்பிற்கு குளித்து விட்டு மகிழச்சியாக இருப்பதற்காக செல்வார்கள் என்றால் எனக்கு தெரியாது. என் மகனும் மற்ற இருவரும் குடித்துவிட்டு குளித்துவிட்டு ஒரே இருசக்கர வாகனத்தில் 3 பேராக வந்து அவர்களாகவே கிழே விழுந்தால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றும் அவர்கள் மீது வேறு எந்த வாகனமும் மோதவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 18th day of August 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**